அனாவாரி நற்சான்றிதழ் ஒன்றை வட்டாட்சியர் கொடுப்பாரானால் அந்த அடிப்படையில் மத்திய கூட்டுறவு வங்கிகளிலே பெறுகின்ற கடன்களுடைய வட்டியைத் தள்ளிப்போட்டு கடன்களை ஒரு ஆண்டுக்குள் செலுத்த வேண்டும் என்பதை 3 ஆண்டுகளுக்குத் தள்ளிப் போடலாம். இரண்டாவது ஆண்டும் வறட்சியின் காரணமாக பயிர் விளைச்சல் சரியாக இல்லை என்று சொன்னால் அந்த காலகட்டத்திலே கட்ட வேண்டிய கடனை 5 ஆண்டுகளாக அதிகமாக தள்ளிப்போடலாம். இப்படி தள்ளிப் போடுவதன் மூலமாக மீண்டும் புதிய கடனைப் பெறுகின்ற விவசாயிகள் புதிதாகக் கடனைப் பெற வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 218, திரு. மா. சுந்தரதாஸ் இருக்கையில் இல்லை.

வினா எண் 219. திருமதி கற்பகம் இளங்கோ. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

219—

காரைக்குடி நகராட்சியில் கூடுதல் தெரு விளக்குகள் அமைத்தல்

***21112**—திருமதி கற்பகம் இளங்கோ:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரைக்குடி நகராட்சியின் முக்கிய இடங்களில் சோடியம் வேப்பர் மற்றும் தெரு விளக்குகள் கூடுதலாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காரைக்குடி நகராட்சியில் நிதிநிலை பற்றாக்குறையாக இருப்பதால் சோடியம் ஆவி விளக்கு அமைக்க இயலாது. 4 அடி குழல் விளக்குகள் 166 அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி கற்பகம் இளங்கோ: பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை வீடுகளில் வசிப்பவர்களும் மின் விளக்குகள் இன்பத்தை பெற்று ஒளிமயமாக வாழவேண்டும் என்ற உன்னத நோக்கோடு ஒரு வீடு ஒரு விளக்கு தந்த நமது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் எனது காரைக்குடி நகரத்தில் முக்கிய வீதிகளில் அதாவது நகர மக்களின் வசதியைப் பொறுத்து புதிய

1995 ஏப்ரல் 4]

பேருந்து நிலையத்தைச் சுற்றிலும், அதற்குச் செல்லும் வழியிலும் அதனைப் போன்று இப்போது ஒரு பக்தர் இருவராகி, இருவர் நால்வராகி, நால்வர் எட்டாகி இப்போது லட்சக் கணக்கில் பக்தர் கூட்டம் அலை மோதுகின்ற இந்தச் சூழ்நிலையில் அந்த அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவிலுக்கும் ராஜகோபுரம் கட்ட வேண்டும் என்று நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்ட இந்தச் சூழ்நிலையில் அந்தக் கோயிலுக்குச் செல்லும் வழியிலும் அதனைப் போன்று மக்கள் அதிகமாக சந்திக்கும் இரண்டாவது பீட் அண்ணாசாலை அருகிலும் அதனைப்போன்று முதல் பீட்டிலும் சோடியம் வேப்பர் லேம்ப் அமைக்க அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி நகராட்சியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற முக்கியமான இடங்களிலே சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க சுமார் 100 சோடியம் ஆவி விளக்குகள் தேவைப்படுகின்றன. இன்றைக்கு ஒரு சோடியம் ஆவி விளக்கு மற்றும் அதற்குண்டான செலவு மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை இவை அத்தனையும் உட்பட 7,000 ரூபாய் செலவாகிறது. நகராட்சியிலே இன்று நிதி நிலை பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தினாலும் சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதற்கு அரசின் தடை இருக்கின்ற காரணத்தினாலும் அங்கே விளக்குகள் அமைக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கற்பகம் இளங்கோ: பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் தெரு விளக்குகள் எந்தெந்தப் பகுதியில் அமைக்கப்படுகிறது என்பதை அறிய ஆவலாக இருப்பதோடு நகராட்சியின் நிதி நிலை மோசமாக இருப்பதால் உலக வங்கி உதவியான அதாவது எம்.யு.டி.எஃப். ஸ்கீம் மூலம் இந்த சோடியம் வேப்பர் லேம்ப் அமைக்க காரைக்குடி போன்ற முக்கிய நகரங்களில் அமைப்பதற்கு மீண்டும் பரிசீலனை செய்து அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காரைக்குடி நகராட்சியிலே மட்டும் 40 வாட்ஸ் குழல் விளக்குகள் சுமார் 2804-ம், 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் 18-ம், 125 வாட்ஸ் மெர்க்குரி விளக்குகள் 64-ம், ஆக மொத்தம் 2,886 விளக்குகள் இன்றைக்கு இருக்கின்றன. இன்றைக்கு

இருக்கின்ற நிதிநிலை பற்றாக்குறையின் காரணமாகத்தான் அங்கே சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க இயலாது என்று தெரிவித்தேன். எம்.யூ.டி.எஃப். என்று சொல்லுகின்ற அந்த உலக வங்கி திட்டத்தின் மூலமாக கடன் உதவி பெறுகின்ற நிலை காரைக்குடி நகராட்சிக்கு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. காரணம் உலக வங்கி நிதியைப் பொறுத்தவரை, ஒரு நிதியைப் பெறுகின்றபோது அந்த நிதியைத் திருப்பி கட்டக்கூடிய தன்மை இருக்க வேண்டும். அதற்குண்டான தகுதி இருக்க வேண்டும். பினான்ஷியல் ஃபீசிபிளிட்டி என்று சொல்லுகின்ற அந்த நகராட்சியினுடைய நிதிநிலை நல்ல நிலையிலே இருந்தால், அதை திருப்பிச் செலுத்தக் கூடிய–அந்த பெறுகின்ற கடனை திருப்பி செலுத்தக் கூடிய ஒரு நிலைமை - இருந்தால் அதைப் பெறலாம். ஆனால் இன்றைக்கு காரைக்குடி நகராட்சியிலே அந்த நிலைமை இல்லை. அங்கே இருக்கின்ற நிதியாதாரத்தை பெருக்கிவிட்டுத்தான் எம்.யூ.டி.எஃப்.-க்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்கு அதையும் மீறி கடந்த மார்ச் மாதம் மட்டும் 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சுமார் 4 அடி குழல் விளக்குகள் இன்றைக்கு 142-க்கு அந்த நகராட்சியினுடைய நிதியிலிருந்து 1 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மின்சார வாரியத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கிறது. விரைவில் பணிகள் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 220—டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

220—

பால்ஊத்துக்காட்டில் தொடக்கப்பள்ளி துவங்குதல்

***23087**—டாக்டர் வெ. சரோஜா:*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, தேவூர் பேரூராட்சி, பால்ஊத்துக்காட்டில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் ஒரு தொடக்கப்பள்ளி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தேவை மற்றும் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு வரும் கல்வி ஆண்டில் கல்வித் துறையின் மூலம் பரிந்துரை செய்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.